IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
EA NO. 1/23 IN EP No. 49/2023
**P.W.1**

| | |
|---|---|
| Name | : சுரேஷ் |
| Father/Husband Name | : குப்பன் |
| Place | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |
| Date | :10-09-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.09.2025.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -**</u>

1. எதிர்மனுதாரர்க்ள் என்ன பரிகாரம் கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த மனுவிற்கான விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரை நான் வழக்கறிஞர் மூலமாக கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதற்கு மறு பதிலுரை ஏதும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா எண். 220/2004 வழக்கின் தீர்ப்பு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அது ஒரு தலைப்பட்ச தீர்ப்பு என்று தெரிந்து கொண்டேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தாவா எண்.235/2007 வழக்கின் தீர்ப்பின் முடிவு குறித்து அதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா எண். 220/2004 வழக்கின் தீர்ப்பிற்கு பிறகு எங்களுக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு விட்டதாக நான் என்னுடைய மனுவில் சொல்லி உள்ளேன் என்றாலும் அதனை உண்மை என நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் எனது தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் இல்லை. இந்த நிறைவேற்று மனு செங்கல்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த போது என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.44/20 மனுவில் உத்தரவு நாள் 8/07/2022 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை திரும்ப பெற முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் **(சாட்சி பதில் அளிக்காமல் மௌனமாக இருக்கிறார்)**

**3.** அந்த மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் நான் மௌனமாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த உத்தரவிற்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. அ.வ.எண். 220/2004 தீர்ப்பிற்கு பிறகு எங்களுக்கும் பெருமாள் யாதவ் வகையறாவிற்கும் இடையே சமரசம் ஏற்பட்டு விட்டது என்று நீதிமன்றத்தில் அதற்கான மனு ஏதேனும் மனுசெய்து சான்றிதழ் பெற்றேனா என்றால் இல்லை. எனவே எங்களுக்கும் எதிர்மனுதாரருக்கு இடையே அ.வ.எண் 220/2004 வழக்கு சம்பந்தமாக எவ்வித சமரசமும் ஏற்படவில்லை என்றாலும் ஆனால் அவ்வாறு சமரசம் ஏற்பட்டதாக பொய்யாக இந்த மனுவை நான் தற்போது தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

4. அ.வ.எண் 220/2004 தீர்ப்பு சம்பந்தமாக எங்களுக்கிடையே எவ்வித சமரசமும் ஏற்படாத நிலையில் நிறைவேற்ற சொத்து சம்பந்தமாக பாராதீனம் செய்ய எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பிற்கு பிறகு நாங்கள் கோருதல் மனு சொத்தை ஏதேனும் பாராதீனம் செய்திருந்தால் அது எதிர்மனுதாரர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த கோருதல் மனுவிற்கு எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த மனு ஏற்கதக்கது அல்ல என்றாலும் பொய்யான காரணங்களுடன் தாக்கல் செய்யப்பட்டடுள்ள இந்த மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எனவே நான் கோரிய அ.வ.எண். 220/2004 தீர்ப்பு அறவே இல்லாநிலையது என்று நான் கோரிய விளம்புகை பரிகாரம் இந்த நிறைவேற்று நீதிமன்றத்தில் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் நாங்கள் இந்த மனு சொத்து சம்பந்தமாக கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

S/d- K.Nilavarasan, 10.09.2025

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.